தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் 8

சுட்டெண்:

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. மெய்யெழுத்து ______________ வகைப்படும்.

அ) மூன்று ☐ ஆ) ஐந்து ☐
இ) நான்கு ☐ ஈ) இரண்டு ☐

2. சீத்தலைச்சாத்தனார் எழுதிய நூல்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) மணிமேகலை ☐
இ) வளையாபதி ☐ ஈ) குண்டலகேசி ☐

3. செயப்படுபொருள் குன்றியவினைக்கு எடுத்துக்காட்டு

அ) படி ☐ ஆ) கூறு ☐
இ) இரு ☐ ஈ) உண் ☐

4. மூன்று பீரங்கிகளையும் முல்லைத்தீவில் கைப்பற்றிய மன்னன்

அ) கயிலைவன்னியன் ☐ ஆ) குத்திகன் ☐
இ) காக்கைவன்னியன் ☐ ஈ) பண்டாரவன்னியன் ☐

5. உயர்திணைப் படர்க்கை

அ) அது ☐ ஆ) அவை ☐
இ) அவற்றை ☐ ஈ) அவர்கள் ☐

6. ஆனிரை மேய்ப்போரை __________ என்று அழைப்பர்.

அ) விறலியர் ☐ ஆ) இடையர் ☐
இ) பாணர் ☐ ஈ) பரணர் ☐

7. வாசித்தோம் என்ற வினைச்சொல் குறிக்கும் இடம்

அ) தன்மை ☐ ஆ) முன்னிலை ☐

இ) படர்க்கை ☐ ஈ) ஒருமை ☐

8. உடலைச் சுட்டெரிக்கும் காலம்

அ) பின்பனி ☐ ஆ) முதுவேனில் ☐

இ) இளவேனில் ☐ ஈ) முன்பனி ☐

9. கோழி கொக்கரிக்கும். அது போல காகம்

அ) பேசும் ☐ ஆ) அகவும் ☐

இ) கூவும் ☐ ஈ) கரையும் ☐

10. விளையாடினான் எனும் வினைமுற்றின் விகுதி

அ) விளையாடு ☐ ஆ) ஆன் ☐

இ) இன் ☐ ஈ) ன் ☐

11. வைரவிழா ____________ ஆண்டின் நிறைவில் எடுக்கப்படும்.

அ) 60 ஆம் ☐ ஆ) 50 ஆம் ☐

இ) 75 ஆம் ☐ ஈ) 25 ஆம் ☐

12. அளவின்றிச் செலவழித்தல் என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) விடாப்பிடி ☐ ஆ) தோள்கொடுத்தல் ☐

இ) ஆழம்பார்த்தல் ☐ ஈ) அள்ளி இறைத்தல் ☐

13. எட்டுத்தொகை நூல்கள் தோன்றிய காலம்

அ) முக்கழககாலம் ☐ ஆ) இடைக்கழககாலம் ☐

இ) கடைக்கழககாலம் ☐ ஈ) முதற்கழககாலம் ☐

14. பின்வருவனவற்றுள் உருபு ஏற்காத வேற்றுமை

அ) 8 ஆம் வேற்றுமை ☐ ஆ) 6 ஆம் வேற்றுமை ☐

இ) 4 ஆம் வேற்றுமை ☐ ஈ) 5 ஆம் வேற்றுமை ☐

15. தமிழர் உலகமக்கள் அனைவரையும் உறவினராகக் கொண்டனர் எனக் கூறியவர்

அ) காளமேகப்புலவர் ☐ ஆ) தொல்காப்பியர் ☐

இ) பூங்குன்றனார் ☐ ஈ) கபிலர் ☐

16. குரங்கின் இளையது குட்டி போல மீனின் இளையது

அ) பிள்ளை ☐ ஆ) குஞ்சு ☐

இ) கன்று ☐ ஈ) குட்டி ☐

17. தைப்பொங்கலுடன் தொடர்புடைய மரம்

அ) ஆல் ☐ ஆ) பனை ☐

இ) வாழை ☐ ஈ) வாகை ☐

18. தங்கை என்ற சொல்லுடன் மூன்றாம் வேற்றுமை உருபைச் சேர்த்தால்

அ) தங்கையது ☐ ஆ) தங்கையின் ☐

இ) தங்கையோடு ☐ ஈ) தங்கையை ☐

19. காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது

அ) குறிப்புவினை ☐ ஆ) தெரிநிலைவினை ☐

இ) உரிச்சொல் ☐ ஈ) பெயர்ச்சொல் ☐

20. விண்மீனும் கண்ணே உன் கண்ணாகுமா? என்ற பல்சுவைப் பாடல் கூறுவது

அ) கனிவை ☐ ஆ) கழிவிரக்கத்தை ☐

இ) நிமிர்வை ☐ ஈ) போற்றலை ☐

21. அடக்கம் இன்மை துன்பம் தரும் என்ற கருத்தைக் குறிக்கும் பழமொழி

அ) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி. ☐

ஆ) சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும். ☐

இ) குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை. ☐

ஈ) துள்ளினமாடு பொதி சுமக்கும். ☐

22. பண்டாரவன்னியன் ______________ எதிர்த்துப் போரிட்டான்.

அ) போர்த்துக்கேயரை ☐ ஆ) ஆங்கிலேயரை ☐

இ) ஒல்லாந்தரை ☐ ஈ) ஆரியரை ☐

23. விற்புருவம் எனும் உவமை அணியின் உவமேயம்

அ) வில் ☐ ஆ) அழகு ☐

இ) போன்ற ☐ ஈ) புருவம் ☐

24. பொற்குடம் என்பதைப் பிரித்தால்

அ) பொன் + குடம் ☐ ஆ) பொற் + குடம் ☐

இ) பொன்க் + குடம் ☐ ஈ) பொற்க் + குடம் ☐

25. கல்லடி வேலுப்பிள்ளை பிறந்த ஊர்

அ) வயாவிளான் ☐ ஆ) நல்லூர் ☐

இ) கந்தரோடை ☐ ஈ) சிறுப்பிட்டி ☐

26. எதிர்காலப் பெயரெச்சத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) உழைத்த ☐ ஆ) உழைத்து ☐

இ) உழைக்கும் ☐ ஈ) உழைத்தான் ☐

27. **குறள்:**

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்

பின்நீர பேதையார் நட்பு இங்கு பேதையார் என்பது

அ) அறிவிலார் ☐ ஆ) நண்பர் ☐

இ) அறிவுடையோர் ☐ ஈ) தீயோர் ☐

28. சிறுவனின் அறிவுத்திறமையை ஊர் பாராட்டியது. இதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) தொழிலாகுபெயர் ☐ ஆ) இடவாகுபெயர் ☐

இ) பொருளாகுபெயர் ☐ ஈ) குணவாகுபெயர் ☐

29. வழிப்போக்கருக்கு உண்டியும் உறைவிடமும் வழங்கும் இடம் சத்திரம். இதில் உண்டி என்பது

அ) பணம் ☐ ஆ) இடம் ☐

இ) உணவு ☐ ஈ) உடை ☐

30. சின்னம்மா என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல்

அ) பெரியப்பா ☐ ஆ) சிற்றப்பா ☐

இ) மாமா ☐ ஈ) அண்ணா ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர்களின் பண்பாடுகளில் விருந்தோம்பலும் ஒன்று. விருந்தே புதுமை என்று கூறியவர் தொல்காப்பியர். வீட்டிற்கு வரும் உற்றார், உறவினர், நண்பர் அனைவரையும் விருந்தினர் என்கின்றோம். ஆனால் பண்டைக்காலத்தில் வீட்டிற்கு வரும் முன் அறியாதவர்களை விருந்தினர் என்பர். மக்கள் போக்குவரத்து இல்லாத காலத்தில், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கால்நடையாகச் சென்றனர். அப்படிச் செல்லும்போது உணவிற்கும் தங்குவதற்கும் ஊர்களையே நம்பினர். ஆகவே புதிதாக வருவோர்க்கு பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந்தோம்பல் பண்பாடு இல்லங்களில் உருவாயிற்று. தூரத்திலிருந்து வருவோர்கள் இளைப்பாறுவதற்கும் இரவு நேரங்களில் தங்குவதற்கும் வீடுகளில் திண்ணைகளைக் கட்டினர். மக்கள் இளைப்பாறத் திண்ணையில் இடமளித்தனர். அவர்களுக்குத் தண்ணீரும் கொடுத்து வரவேற்றனர். இவ்வாறு தொன்றுதொட்டு விளங்கும் விருந்தோம்பலை நாம் வளர்ப்போம்! அதை நமது பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுப்போம்.

1. விருந்தே புதுமை என்று கூறியவர் யார்?

____________________________________________

2. எதற்காக வீடுகளில் திண்ணைகளைக் கட்டினர்?

____________________________________________

____________________________________________

3. பண்டைக்காலத்தில் யாரை விருந்தினர் என்பர்?

____________________________________________

____________________________________________

4. மக்கள் போக்குவரத்து இல்லாத காலத்தில் எவ்வாறு சென்றனர்?

____________________________________________

____________________________________________

5. நாம் பிள்ளைகளுக்கு எதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்?

____________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. “எம் தமிழர் மூதாதை”! எனப் பாவேந்தர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

________________________________________

2. பண்டாரவன்னியன் விழுப்புண் அடைந்த ஊர் எது?

________________________________________

3. ‘வென்று வருவதற்கு முன்னே - இதைத் தின்று சுவைத்திடுக’ இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

________________________________________

________________________________________

4. இலங்கையைச் சோழநாட்டின் ஒரு மாநிலமாக மாற்றியவன் யார்?

________________________________________

5. காளமேகப்புலவர் ஆய்ச்சியரிடம் வாங்கிப் பருகியது என்ன?

________________________________________

6. பண்டாரவன்னியனின் படைத்தலைவர் யார்?

________________________________________

7. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களால் நாம் எவற்றை அறியலாம்?

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# முத்தமிழ்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழோ | கலைஞர் | இசை | ஆடலும் | தாயினும் |

மூன்று தமிழே முத்தமிழ்!

முதன்மை கொண்டது இயற்றமிழ்!

ஈன்ற ____________________ சிறந்தது

இயற்றமிழ் அதனைக் கற்றிடு!

பாடும் தமிழே ____________________ த் தமிழ்

பாடப் பாடக் களிப்புறும்

கூடும் ____________________ இசையினால்

கொஞ்சும் தமிழின் புதுச்சுவை!

நாடகத் ____________________ சுவையுடன்

நயம்படப் பாவனை புரிவது

____________________ பாடலும் கலந்தது

அனைவர் மனத்தையும் ஈர்த்தது!

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

உருவக அணி ______________________

ஏவல் வினை ______________________

வினாச்சொல் ______________________

2. தரப்பட்டுள்ள வேற்றுமைகளுக்குப் பொருத்தமான சொல்லியங்கள் எழுதுக.

6 ஆம் வேற்றுமை ______________________

விளி வேற்றுமை ______________________

3. கீழுள்ள வினைச்சொல்லின் திணை, பால், எண் என்பவற்றைத் தருக.

| | திணை | பால் | எண் |
|---|---|---|---|
| பிளிறுகிறது | ________ | ________ | ________ |

4. எதிர்ப்பாற் சொற்களைத் தருக.

பாடகி ______________

துணைவி ______________

ஒருவன் ______________

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

தொணதொண ______________________

பாடிப்பாடி ______________________

புள்ளிகள் 15

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. மன்னன் அரசவைக்குள் __________________ மக்கள் அவனை வணங்கினர்.
   ( நுளைந்ததும், நுழைந்ததும் )

2. நாட்டுப்புறக் கலைகள் நமது __________________ தொடர்புடையவை.
   ( மண்ணோடு, மன்னோடு )

3. கற்றறிந்த அறிஞர்கள் __________________ கூடி இருந்தனர்.
   ( அரங்கில், அறங்கில் )

4. ஒவ்வொருவரும் தமது __________________ நோக்கி முன்னேற வேண்டும்.
   ( குறிக்கோலை, குறிக்கோளை )

5. வன்னிக் குறுநில அரசுகள் யாழ்ப்பாண அரசின் __________________ ஏற்றிருந்தன.
   ( மேலாளுமையை, மேலாலுமையை )

| புள்ளிகள் 05 |
|---|

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- காட்டுமல்லிகை
- தமிழ் இலக்கிய வளம்
- பிறருக்கு உதவுவோம்
- எனது குடும்பம்
  - எனது குடும்பத்தில் உள்ளோர்
  - குடும்பத்தில் பெற்றோரின் பங்கு
  - ஒற்றுமையின்மையால் ஏற்படும் இடர்கள்

புள்ளிகள் 20